**OS No.42/2020**
DW 2 – சாரங்கன்

நாள் 05.03.2026

**பி.வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

எனக்கு சொந்தஊர் இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடம் மெய்யம்புலி கிராமம் என்றால் இல்லை மானாமதுரை தான். நீங்கள் மானாமதுரையில் வசிக்கிறேன் என்பதற்கு என்ன ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வாக்காளர் அடையாள அட்டையை கொடுத்துள்ளேன்.

நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தங்கச்சி மடம் மெய்யம்புலி கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள முகவரி மட்டும் தான் தவறு மற்றவைகள் எல்லாம் சரிதான்.

நீங்கள் பொய்யான முகவரி கொடுத்து நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் பொய் என்றால் சரியல்ல. உங்கள் தகப்பனார் பெயர் கிருஷ்ணன். அவரது தகப்பனார் பெயர் தெரியாது.

கிருஷ்ணனுடன் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் சிறு வயதில் இருந்து அனாதையாக இருந்தார். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் உங்கள் சொத்து எங்குள்ளது என்றால் தெரியவில்லை.

சர்வே எண் 503/1 என்பது யார் சொத்து என்றால் எங்கள் சொத்து அதற்கு என் அப்பா பெயரில் பட்டா உள்ளது. பட்டா எண் 42 என்று சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நான் 1 ம் பிரதிவாதியின் தந்தையிடம் கிரயம் பெற்று குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன். அந்த கிரய பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 1974 ல் கிரயம் பெற்றேன்.

நீங்கள் கிரயம் பெற்றதாக சொன்ன சொத்திற்கு எனது அக்கா பெயருக்கு எப்படி பட்டா ஏற்பட்டது என்றால் தற்போது தான் மாற்றப்பட்டுள்ளது. மேற்படி அக்காவின்பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நிரூபண வாக்குமூலத்தில் எல் வடிவம் என்று சொல்லியுள்ளது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்லக்கூடியது. நீங்கள் 1 ம் பிரதிவாதியின் தந்தையிடம் புல எண் 503/1 ஐ கிரயம் வாங்கவில்லை என்றும் அந்த சொத்தை உங்களது தந்தை கிருஷ்ணனுக்கு 1 ம் பிரதிவாதியின் தந்தை முத்துராஜா தேவர் இனாமாக கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

நான் தற்போது இராமேஸ்வரத்தில் மெய்யம்புலியில் வசித்து வருகிறேன். உங்கள் வீட்டிற்கு கிழக்கே தான் 1 ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தெற்கு பக்க இரயில்வே சுவருக்கு அப்பால் பொதுமக்கள் பயன்படுத்தும் பாதை இல்லை என்றால் சரிதான். இரயில்வே காம்பவுண்டை இடித்து அந்த பாதையில் தற்போது பொதுமக்கள் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான்.

நான் இராமேஸ்வரத்தில் மெய்யம்புலியில் வசித்து வருகிறேன் என்றால் திருமணம் முடிந்து தான் வசித்து வருகிறேன். மானாமதுரையில் 2010 ம் ஆண்டுவரை இருந்தேன். நீங்கள்

மானாமதுரையில் வசித்ததே இல்லை என்றும் இராமேஸ்வரத்தில் மெய்யம்புலியில் தான் வசித்து வருகிறீர்கள் என்றும் 1 ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞர் அவர்களுக்கு நான் தான் சொன்னேன். வழக்கைப் பற்றி உங்களுக்கு முழுமையாகத் தெரியாது 1 ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**